# தற்காலச் சூழலில்
# இலங்கை முஸ்லிம்களின் படைப்பிலக்கியம்

எம்.ஏ. முஹம்மட் றமீஸ்

**அறிமுகம்:**
தமிழ் மொழியின் மிகச் சிறப்பான பண்புகளில் ஒன்று, அது பல்லின மக்களினதும் பண்பாட்டின் அடியாக எழுந்த இலக்கியங்களை உள்வாங்கியதாகும். கீழைத்தேய மதம் சார்ந்தது மட்டுமன்றி மேலைத்தேய கிறிஸ்தவத்தினதும் அரபு மொழியினைப் பேசுகின்ற முஸ்லிம்களினதும் பண்பாட்டு இலக்கியங்களை தமிழில் கண்டுகொள்ள முடியும். எனவேதான் தமிழ் இலக்கியம், தமிழ் மொழி பற்றி சிந்திக்கும் போது அதில் முஸ்லிம்களினதும் கிறிஸ்தவர்களினதும் பங்களிப்பினை தனியாகப் பேசுவதுண்டு. அந்த அடிப்படையில்தான் தற்காலச் சூழலில் இலங்கை முஸ்லிம்களின் படைப்பிலக்கியம் பற்றி இக்கட்டுரை நோக்குகின்றது.

இலங்கையில் முஸ்லிம்களின் படைப்பிலக்கியம் என்று தனியாக நோக்குவதில் ஒரு சமூக அரசியல் முக்கியத்துவமும் இருக்கிறது. தமிழகத்தை விட இலங்கையில் இவ்வாறு தனித்து நோக்குதலுக்கு அதிக அழுத்தமும் இருக்கிறது. இலங்கை முஸ்லிம்கள், சுதந்திரத்துக்குப் பின் தம்மை ஒரு இனக்குழுமமாக (Ethnic Group) அடையாளம் கண்டு கொள்ள முனைந்த பொழுது தமது வரலாறு, அரசியல், இலக்கியம் என்று தனி நிலைகளாக சிந்திக்கத் தொடங்கினர். இங்குள்ள முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் மிகச் செறிவாகவும் ஏனைய இடங்களில் பரந்தும் வாழ்ந்தும் வருகின்றனர். எல்லா இடங்களிலும் வாழ்கின்றவர்கள் தமிழையே தமது தாய் மொழியாக கொண்டுள்ளனர். எனவே தமிழ் இலக்கியத்திற்கான அவர்களது பங்களிப்பு குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல. இந்த உறவுத் தொடர்ச்சி பல நூற்றாண்டு பாரம்பரியமிக்கதாகும். ஆனால் இக்கட்டுரை தற்காலச் சூழலை மையமாகக் கொண்டே இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பினை நோக்குகின்றது.

தற்காலச் சூழல் என்பது பொருள் அடிப்படையிலும் வடிவ அடிப்படையிலும் நவீன இலக்கியச் சூழலை அடியொட்டியதேயாகும். இக்காலம் இலங்கையைப் பொறுத்தவரையில் பல்வேறு வகைப்பட்ட சமூக, அரசியல், பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கிய காலமாகும். இலங்கையில் வெறும் வர்த்தக சமூகமாகவே அடையாளப்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் இன்று கல்வி, அரசியல், பொருளாதார விழிப்புணர்வுள்ள சமூகமாக மாறியிருக்கின்றது. இலங்கையில் இரண்டாவது சிறுபான்மையினரான முஸ்லிம்கள் பெரும் தேசியம், தமிழ்த்தேசியம் முதலான கெடுபிடிகளினால் அவ்வப்போது பாதிக்கப்பட்டு வருகின்ற வரலாறும் இருக்கின்றது. அதனால் முரண்பாட்டுக்குள் வாழ்கின்ற, அச்சத்துடன் வாழ்கின்ற, அகதியாக வாழ்கின்ற அனுபவங்களைக் கொண்டுள்ளனர். அதேநேரம் முஸ்லிம் சமூகத்திற்குள்ளே சமயம் சார்ந்த, சமூகம் சார்ந்த அக முரண்பாடுகளும் இல்லாமலில்லை. ஏழ்மை, சீதனச் சிக்கல், ஆண்களும் பெண்களும் தொழில் காரணமாக வெளிநாட்டுக்கு இடம்பெயர்ந்து செல்லல் முதலான அனுபவங்களும் உண்டு. இவ்வாறான மிக நுண்ணிய உணர்வுகளையும் அவதானிப்புக்களையும் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம்கள் பதிவு செய்து வந்திருக்கின்றார்கள். அதேநேரம் நவீன இலக்கியக் கோட்பாடுகளையும் உலகப் போக்குகளையும் பிரதிபலிக்கத்தக்கதாகவும் அவர்களது இலக்கியம் அமைந்திருக்கின்றது என்பதில் தவறில்லை.

தற்கால சூழலில் இலங்கை முஸ்லிம்களின் படைப்பு என சிந்திக்க வருகிறபோது, பல்வேறு வினாக்கள் மேற்கிளம்புகின்றன. இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்பது பற்றி இன்னும் முழுமையான ஒரு வரைவிலக்கணம் கிடைக்கப்பெறாதிருக்க, நவீன இலக்கியத்தை சமய வழி நின்று பிரித்துப் பார்க்க முடியாது என்ற பேராசிரியர் சிவத்தம்பி, நுஃமான் ஆகியோரின் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட சூழ்நிலையில் தற்கால சூழலில் இலங்கை முஸ்லிம்களின் படைப்பிலக்கியம் என்று தனியாகப் பார்ப்பது மிகவும் ஆரோக்கியமான வழிமுறையாகும். இவ்விடத்தில் நவீன இலக்கியமும் மதச் சார்பும் குறித்த எம்.ஏ. நுஃமானின் (2006:145, 146) கருத்து நோக்கத்தக்கது:

> "இன்று தமிழில் நவீன படைப்பிலக்கியத் துறையில் ஈடுபட்டிருக்கும் முக்கியமான முஸ்லிம் எழுத்தாளர்களைப் பொறுத்தவரை அவர்களில் பலரது படைப்புகளில் மத அடையாளத்தை விட நவீன தமிழ் இலக்கியம் என்ற பொது அடையாளமே முதன்மை பெற்றுத் தெரிகின்றது. அப்துல் ரகுமான், மு. மேத்தா, இன்குலாப் போன்ற முஸ்லிம் கவிஞர்களதும், வைரமுத்து, சிற்பி, மீரா போன்ற முஸ்லிம் அல்லாத கவிஞர்களதும், கவிதைகளை வேறுபடுத்துவது இவர்களின் தனிப்பட்ட

ஆளுமைக் கூறுகளே தவிர மதக்கூறுகள் என்று கூற முடியாது. நவீன தமிழ்ப் புதுக்கவிஞர் என்ற பரந்த வட்டத்துள் இவர்கள் நிலை கொண்டுள்ளனர். அவ்வகையில் இவர்களின் கவிதைப் பொருளிலும் மொழி நடையிலும் மத அடையாளங்களை மிக அபூர்வமாகவே நம்மால் இனங்காண முடிகிறது.

நவீன புனைகதை எழுத்தாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் சமூக வாழ்வைப் பின்னணியாக வைத்தே இலக்கியம் படைப்பதனால் பாத்திரங்களின் கலாசாரமும் மொழியும் இலக்கியத்துள் வருவது தவிர்க்க முடியாதது. ஆயினும் இன்று சமய நெறியை வலியுறுத்துவதற்காகப் புனைகதை படைப்போர் மிகச் சிலரே. வெவ்வேறு அளவில் சமூகப் பிரச்சினைகளே இன்றைய புனைகதைகளின் உள்ளடக்கமாக அமைகின்றது. இவ்வகையில் முஸ்லிம் எழுத்தாளர்கள், முஸ்லிம் அல்லாத எழுத்தாளர்களில் இருந்து அதிகம் வேறுபடவில்லை. எனினும் யதார்த்த நெறிப் புனைகதைகளின் அடிப்படைப் பண்புக்கூறு என்ற வகையில் முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகளில் முஸ்லிம் தமிழ் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகின்றது. இன்றைய புனைகதை இலக்கியங்கள் மூலமே முஸ்லிம் தமிழின் பிரதேச ரீதியான துணைக் கிளைமொழிகள் (Regional Sub Dialects) இலக்கிய வெளிப்பாடு பெற்றுள்ளன. தமிழக முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகளில் இந்திய முஸ்லிம் தமிழின் தனித்துவக் கூறுகளையும் நாம் இனங்காண முடிகின்றது. இலங்கைக்குள்ளேயே கிழக்கிலங்கை, தென்னிலங்கை முஸ்லிம்களின் வேறுபட்ட மொழி வழக்காறுகள் அவ்வப் பிரதேச முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகளில் நன்கு வெளிப்பாடு பெற்றுள்ளன. ஆயினும், முஸ்லிம் எழுத்தாளர்களின் நவீன இலக்கிய முயற்சிகளையெல்லாம் இஸ்லாமிய இலக்கியம் என்ற பிரிவுகள் அடக்கமுடியுமா என்பது விவாதத்துக்குரியது. வைக்கம் முகம்மது பஷீரை அல்லது தோப்பில் முகம்மது மீரானை ஒரு இஸ்லாமிய நாவலாசிரியராக அடையாளப்படுத்துவது அபத்தமாகவே அமையும்."

இலங்கை முஸ்லிம்களின் தற்கால சூழல் சார்ந்த படைப்புக்கள் தனியாக முஸ்லிம் சமூகத்தை அடியொட்டியும் எழுந்திருக்கின்றன, அவ்வாறன்றி பொதுவாகவும் அமைந்திருக்கின்றன. சில முஸ்லிம் படைப்பாளிகள் தற்கால சூழலில் வெறுமனே முஸ்லிம் பெயரிலான கதை மாந்தர்களை மாத்திரம் கொண்டு இலக்கியங்களைப் படைத்துள்ளனர். முஸ்லிம் அல்லாத படைப்பாளிகள் சிலர் முஸ்லிம் கதைமாந்தர்களை, முஸ்லிம் பிரச்சினைகளை அடியாகக் கொண்டும் இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வேறு சில பெரும்பாலான படைப்புக்கள் தற்கால சமூகத்தை கீறிக்காட்டுவனவாக அமைந்துள்ளன. எவ்வாறு இருப்பினும் இலங்கை முஸ்லிம்களின் படைப்பிலக்கியம் தற்கால சூழலைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருப்பது குறித்தும் அவை திருப்பு முனையாக அமைந்தவாறு குறித்தும் வகைமாதிரியான சில எடுத்துக்காட்டுகளை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை ஆராய விரும்புகிறது.

தற்காலச் சூழலில் இலங்கை முஸ்லிம்களின் படைப்பு நாவல், சிறுகதை, கவிதை என எல்லா வகையிலும் நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை இலங்கை முஸ்லிம் எழுத்தளர்கள் தமிழ் இலக்கியத்துக்கு மிகப் பெரும் பணி செய்திருப்பதும் கவனிக்கத்தாகும். இலங்கையில் தமிழ் நாவலை துவக்கி வைத்தவரே முஸ்லிம் எழுத்தாளரான சித்திலெப்பை ஆவார். அதேபோல இலங்கைத் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்திற்கு பித்தன் முதல் அம்ரிதா ரியாஸ் வரை பல எழுத்தாளர்கள் காத்திரமான பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். நுஃமான், சோலைக்கிளி முதலானவர்கள் நவீன கவிதையின் மிகப்பெரும் ஆளுமைகளாகவும் திருப்புமுனையாகவும் தொழிற்பட்டு இருக்கிறார்கள். இவ்வாறு தற்காலச் சூழலில் இலங்கை முஸ்லிம் படைப்பாளிகளின் பங்களிப்பு மிக விரிவாக நோக்கத்தக்கதாகும்.

நாவல்:

தென்னாசிய முஸ்லிம்களிடம் குடி கொண்ட மூட நம்பிக்கைகளுக்கெதிராக எழுந்த மிக முக்கியமான மறுமலர்ச்சி நாவலாக சித்திலெப்பையின் 'அசன்பே கதை' அமைகிறது. மேற்கத்தேய கலாசாரம் முற்றாகப் புறக்கணிக்கக் கூடியதல்ல என்ற வாதம் அவரது நாவலில் வெளிவந்தது. முஸ்லிம் சமூகத்தை விளிப்புணர்வடையச் செய்வதில் அவரது நாவலுக்கு பெரிதும் பங்களிப்பு இருந்தது. இதே நேரம் இலங்கையின் முதல் தமிழ் நாவலாகவும் இதுதான் கொள்ளப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

1950களில் இலங்கைத் தமிழ் இலக்கியப் போக்கில் இடதுசாரிச் சிந்தனை மிக ஆழமாக வேரூன்றி இருந்தது. இச்சிந்தனையைப் பிரதிபலிக்கத்தக்கதாக சுபைர் இளங்கீரன் பல நாவல்களை எழுதினார். இலங்கை முஸ்லிம்களுள் மிகப் பெரும் தொகையான

நாவல்களை எழுதியவர் இவரே. ஆனால் இவரது நாவல்கள் அனைத்தும் தமிழர்களுடைய வாழ்வை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது. 1950களில் இலங்கைத் தமிழ் நாவல் ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக இளங்கீரன் அமைகின்றார்.

இலங்கைத் தமிழ் நாவல் இலக்கியம் இன்னும் பெரிதும் வளர்ச்சியுறாத ஒன்றாக இருக்கின்ற சூழ்நிலையில் அ.ஸ. அப்துஸ் ஸமது, வை. அஹமட், எம்.எச்.எம். சம்ஸ், முஹம்மது ஜலீல், ஜுனைதா ஷரீப், திக்குவல்லை கமால், ஜின்னாஹ் சரீப்டீன், ப. ஆப்தீன், சித்தி ரிஸா, எஸ். நஸீறுதீன், ஆர்.எம். நௌஷாத், அஸீஸ் எம். பாயீஸ், அப்துல் றஸாக் என்று பலர் நாவல் இலக்கியத்துக்கு பங்களிப்புச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை முஸ்லிம் சமூக வாழ்க்கையை தனித்துவமாகப் பார்த்தவகையில் திக்குவல்லை கமாலின் 'ஒளி பரவுகிறது', வை. அஹமட்டின் 'ஒரு கிராமத்துப் பெண்', ஜுனைதா ஷரீபின் 'சாணைக் கூறை' முதலான பல நாவல்கள் எடுத்துக்காட்டாக அமைகின்றன. ஆர்.எம். நௌஷாத்தின் 'நட்டுமை', ஜுனைதா ஷரீபின் 'சின்ன மரைக்கார் பெரிய மரைக்கார்' முதலான நாவல்கள் முஸ்லிம் சமூக வரலாற்றைப் பிரதிபலிப்பன. இலங்கைத் தமிழ் முஸ்லிம்களிடையே மிக நெருக்கமான உறவு இருந்து வந்தது. இந்த உறவு நிலை போராட்ட காலத்தில் முரண்படத் தொடங்கியது. அந்தப் பிறழ்வினை சித்திரிக்கத்தக்கதாகவும் முஸ்லிம் தேசிய உணர்வு, முஸ்லிம் அரசியல் முதலானவற்றை பிரதிபலிக்கத்தக்கதாகவும் எஸ். நஸீறுதீன் 'நச்சுவளையம்' என்ற நாவலை எழுதினார். தமிழ் இயக்கங்கள் இந்திய அமைதி காக்கும் படையினர் இருந்த காலத்தில் நீதிமன்றங்களை வைத்து பரிபாலித்தபோது இடம்பெற்ற சம்பவங்களும் இந்நாவலில் பதிவாகியுள்ளன.

இதேபோல சிங்கள முஸ்லிம் அரசியல் உறவுகளையும் முரண்பாடுகளையும் சித்திரிக்கும் வகையில் ப. ஆப்தீன், அஸீஸ் எம். பாயிஸ் ஆகியோரது நாவல்கள் குறிப்பிடத்தக்கன. சிங்கள், முஸ்லிம் உறவு நிலையைப் பிரதிபலிக்கத்தக்கதாக ஆப்தீனின் 'கருக்கொண்ட மேகம்' அமைய, அஸீஸ் எம். பாயிஸின் 'வயலான் குருவி' முரண் நிலையைக் கச்சிதமாகச் சித்திரிக்கின்றது.

அப்துல் றஸாக்கின் 'வாக்குமூலம்' பல்கலைக்கழக சூழலில் முஸ்லிம் பெண்களின் உறவு நிலை, வாழ்க்கை முறை பற்றிப் பேசுகின்ற முக்கியமான நாவலாகும். இலங்கை முஸ்லிம் பெண்களின் மிகச் சுதந்திரமான சிந்தனை பற்றித் தெரிந்து கொள்ள இந்நாவல் உதவும். பாரம்பரிய முஸ்லிம் பெண்களில் இருந்து பல்கலைக்கழகத்தில் கற்கும் முஸ்லிம் பெண் மாணவர்களிடையே சிந்தனை முறையிலும் சுதந்திரத்திலும் வேறுபாடிருப்பதை இந்நாவல் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. பெண்ணியம், பின் நவீனத்தும் முதலான சிந்தனைகளோடு தொடர்புபடுத்தி இந்நாவலை நோக்க முடியும். இவ்வாறு நவீன கோட்பாடுகளோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டிய குறிப்பிடத்தக்க நாவல்கள் இலங்கை முஸ்லிம்களினால் படைக்கப்பட்டிருக்கின்றன எனத் துணிந்து கூறமுடியும். பெரிதும் வளர்ச்சியுறாத இலங்கைத் தமிழ் நாவல் சூழலில் முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இதேபோல தமிழ்ச்சிறுகதைக்கும் முஸ்லிம்கள் காத்திரமான பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.

**சிறுகதை:**

இலங்கைத் தமிழ் நாவலிலக்கிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இலங்கை முஸ்லிம்களின் சிறுகதையாக்கத்துக்கான பங்களிப்பு அளப் பெரியதாகும். இலங்கைத் தமிழ் சிறுகதைகளின் துவக்கம் வட இலங்கையை மையமாக கொண்டு எழ முஸ்லிம்களின் சிறுகதைக்கான பங்களிப்பு கிழக்கிலிருந்து ஆரம்பிக்கின்றது. இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் வெவ்வேறு திருப்புமுனைகளாகக்கூட அவர்கள் திகழ்ந்துள்ளனர். அதற்கு பித்தன், மருதூர்க் கொத்தன், எஸ்.எல்.எம். ஹனீபா, அம்ரிதா றியாஸ் ஆகியோரின் எழுத்துக்கள் போதிய சான்றாகும்.

1950, 60கள் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முக்கியமான காலகட்டமாகும். இக்காலகட்டத்திலேதான் முற்போக்கு இயக்கத்தின் செயற்பாடுகளும், இடதுசாரிச் சிந்தனை உள்ளவர்களின் செயற்பாடுகளும் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் செல்வாக்குச் செலுத்தின. இலங்கைத் தமிழ்ச் சிறுகதையாளர்களுள் முக்கியமானவராகவும் முதல் முஸ்லிம் சிறுகதையாளராகவும் பெயர் பெற்றவர் 'பித்தன்' என்ற புனைபெயரில் எழுதிய கே.எம்.ஷா ஆவர். இவர் முஸ்லிம் சமுகத்தில் உள்ள பிரச்சினைகளைத் தமது

கதைகளில் வெளிப்படுத்தினார். குறிப்பாக முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் பல்வேறு இடர்ப்பாடுகளும் அவர் கதைகளின் கருவாகின. சுமார் 1950களில் முஸ்லிம் சமுகம் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளை அறியும் ஆவணமாக பித்தனின் கதைகள் காணப்பட்டன. மிகவும் பிற்காலத்திலேயே அவர் கதைகள் சேர்ந்த 'பித்தன் கதைகள்' என்ற தொகுதி வெளியானது. பித்தன் என்ற பெயர்வரக் காரணம் கே.எம்.ஷா, தமிழ் நாட்டில் புதுமைப்பித்தனை சந்தித்தமையும் அவரது கதைகளுடன் இருந்த ஈடுபாடுமாகும். அ.ஸ. அப்துஸ் ஸமது, ஏ. இக்பால், எம்.ஏ. நு'.மான், வை. அஹமட், மருதூர்க்கனி, மருதூர்வாணன், முத்துமீரான், மருதமுனை மஜீட், ஜின்னா ஷரிபுதீன், யூ.எல். ஆதம்பாவா முதலானவர்களும் இலங்கைத் தமிழ்ச் சிறுகதைக்கு குறிப்பிடத்தக்க பங்காற்ற மருதூர்க்கொத்தன் அக்கால கட்டத்தின் திருப்புமுனையாக மாறுகிறார்.

1960களில் மருதூர்க்கொத்தன் என்ற புனை பெயரில் எழுதிய வீ.எம். இஸ்மாயில் தேசிய அளவில் பெயர் பெற்ற முக்கியமான சிறுகதையாளராவார். மருதூர்க்கொத்தனின் கதைகள் அவர் வாழும் பிரதேசமான மருதமுனையைப் பெரும்பாலும் களமாகக் கொண்டவை. மருதமுனை மக்களின் தொழில், வாழ்க்கைமுறை, மொழி முதலான பண்பாட்டை அவரது பெரும்பாலான கதைகள் பிரதிபலிக்கின்றன. ஆரம்ப காலத்தில் இடதுசாரி சிந்தனையுள்ள அவர் மக்களிடையே இருந்த ஏற்றத்தாழ்வை தனது கதைகளிலே கூர்மையாக விமர்சித்தார். இஸ்லாமிய மார்க்க அம்சங்களான ஸக்காத், ஹஜ் முதலானவற்றை யதார்த்தத்தோடு அவர் தனது கதைகளில் அணுகியுள்ளார். கொத்தனின் கதைகள் இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டின் பல்வேறு கூறுகளையும் தெளிவாக புலப்படுத்துவன எனலாம். இதனை அறிய 'மருதூர்க்கொத்தன் கதைகள்' பெரிதும் உதவும்.

இலங்கைத் தமிழ்ச் சிறுகதைப் போக்கில் மிக முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியவர்களுள் எஸ்.எல்.எம். ஹனீபாவும் குறிப்பிடத்தக்கவர். அவ்வப்போது சிறுகதை எழுதி வந்த இவர் 'மக்கத்துச் சால்வை' தொகுதி மூலம் பெரிதும் அறியப்பட்டவர். சிறுகதைக்குரிய எல்லாப் பண்புகளையும் கொண்ட நல்ல கதைகளை இவர் எழுதி வருகிறார். கிழக்குப் பிரதேசத்தின் பல்வகைமையைப் பிரதிபலிக்கும் இவரது எழுத்துக்கள் 1980க்குப் பிந்திய கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் சித்திரிக்கத் தவறவில்லை. தற்கால மக்களின் வாழ்க்கை முறையில் உள்ள முரண்பாடுகளும் தமிழ் முஸ்லிம் இனப்பிறழ்வின் வடுக்களும் இவரது கதைகளில் தெளிவாக வெளிவந்தன.

காலச் சுவடு வெளியீடாக வந்த 'அவளும் ஒரு பாற்கடல்' என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள பல கதைகள் இக்காலத்துப் பிரச்சினைகளைப் பிரதி பலிப்பனவாக அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவரது கதைத் தொகுதி பற்றி கா. சிவத்தம்பி (ஹனீபா எஸ்.எல்.எம். 2007:ii) பின்வருமாறு கூறுவார்:

> "...ஒட்டு மொத்தத் தமிழ்ச்சிறுகதைத் துறையின் புதுமைப்பித்தனுக்குப் பின்னர் வரும் பங்களிப்பாளர்களுளொருவராகக் கொள்ளல் வேண்டும்".

தென்னிலங்கையில் இருந்து திக்குவல்லை கமால், எம்.எல்.எம். மன்சூர், அல். அசூமத், மொயின் சமீம், றஹீம் ஆகிய பிரசித்தமான எழுத்தாளர்கள் சிறுகதைகளை எழுதினர். பிரதேசம் தழுவிய அளவிலும் முஸ்லிம் சமூகத்தின் அக அம்சங்களை புலப்படுத்தும் வகையிலும் இவரது கதைகள் அமைந்திருந்தன. மேற்குறிப்பிட்ட எழுத்தாளர்களைப் புறந்தள்ளி இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றை எழுத முடியாத அளவுக்கு அவர்களது சிறுகதைகளில் தனித்துவம் நிரம்பி இருந்தது.

1970, 80கள் இலங்கைத் தமிழ்ச்சிறுகதை வளர்ச்சியின் முக்கியமான காலகட்டம். சாதி, வர்க்க முரண்பாடுகள், பெண்ணியம், தமிழ்த்தேசியம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள்: குறிப்பாக இலங்கைத் தமிழர் போராட்டத்தில் நிகழ்ந்த முக்கிய திருப்பங்களான தமிழ்க் குழுக்களிடையிலான மோதல்கள், தமிழ் முஸ்லிம் முரண்பாடுகள், இந்திய அமைதிப்படையின் வருகை, புலம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் முதலானவை இலங்கைத் தமிழ்ச் சிறுகதையில் இடம்பிடிக்கத் தொடங்கின. அதே போல சிறுகதை வடிவத்திலும் நேர்த்தியானதும் – கலைத்துவமிக்கதுமான பண்புகள் வளரத் தொடங்கின. இந்தப்பின்னணியில் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் பலர் கதை எழுதினர். எம்.ஐ.எம். றஊப், நற்பிட்டிமுனை பளீல், ஆர்.எம். நௌஷாத், ஏ.சி. றாஹில், எம். பௌஸர், எஸ். நஸிறுதீன், எம்.எம். நௌஷாத் முதலானவர்கள் முக்கிய பங்காற்றியுள்ளார்கள்.

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியிலே எம்.ஐ.எம். றஊபுக்கும் ஒரு முக்கிய இடம் இருக்கின்றது. அவரது 'கனவும் மனிதன்' சாதாரண அனுபவங்களைப் புதிய எடுத்துரைப்பு முறையில் கூறும் குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுதியாகும். நவீன சிறுகதை வளர்ச்சியில் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் இளைய பரம்பரைகளில் றவூப் முதல்வராகிறார். அவரது கதைகள் இளைஞர்களின் வாழ்க்கைச் சுமையின் மன ஓட்டத்தை சித்திரிப்பன. மருதமுனையின் கிராமியச் சூழல் அவரது கதைகளுக்குச் சிறப்பான களவர்ணனையையும் மொழியையும் கொடுத்திருக்கிறது எனச் சொல்லலாம். இக்கால கட்டத்தில் மசூரா ஏ. மஜீட், ஹஸீனா வஹாப், சபானா ஜுனைதீன் ஆகிய பெண் சிறுகதை ஆசிரியர்களும் பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்தி சிறு கதைகளை எழுதி வந்தமை குறிப்பிடத்தக்கது.

1983இற்குப் பிந்திய காலம் இலங்கை இலக்கியப் பண்புகளின் பெரிதும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. அவ்வகையில் 1980 – 1990களுக்கிடையில் ஒரு தொடர்ச்சி உண்டு. இக்கால கட்டத்திலே இலங்கைத் தமிழர் போராட்டத்தின் காரணமாக நிகழ்ந்த பல்வேறு பிரச்சினைகள் இலக்கியங்களில் பிரதிபலிக்கத் தொடங்கின. அந்நியமாதல், புலம்பெயர்தல் முதலானவற்றோடு யுத்தத்தின் அவலமும் சோகமும் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பெரிதும் பாதித்திருந்தன.

இக்கால கட்டத்தில் இலங்கைச் சமகால பிரச்சினைகளைப் பிரதிபலிக்கத்தக்கதாக சிறுகதைகளை எழுதிய மிக முக்கியமான எழுத்தாளர் ஓட்டமாவடி அறபாத். அவரது கதைகள் 'நினைந்தழுதல்', 'உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி' என்ற தொகுதிகளாக வெளிவந்தன. 1980களுக்குப் பின்னர் இனப்பிரச்சினை காரணமாக கிழக்கு முஸ்லிம் மக்கள் அனுபவித்த இன்னல்களை தனது கதைகளிலே அவர் கலாபூர்வமாக பதிவு செய்துள்ளார். அவ்வேளை முஸ்லிம்கள் எல்லைக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்ந்தபோது நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டனர். அப்போது இடம்பெற்ற தில்லுமுல்லுகளும் சர்வதேச நிறுவனங்களின் உதவி பற்றிய தகவல்களும் அறபாத்தின் (1998:61) கதைகளில் பதிவாகியுள்ளன. அறபாத்தின் கதைகள் 80களுக்கு பிந்திய இலங்கை முஸ்லிம்களின் வாழ்வியலை அறிய நல்லதொரு ஆவணமாகும். இலங்கைத் தமிழ்ச்சிறுகதை வளர்ச்சி பற்றிக் குறிப்பிட வருகிறபோது மு. பொன்னம்பலத்தின் பின்வரும் கூற்றைக் குறிப்பிட்டாக வேண்டும்:

> "இன்று ஆக்க இலக்கியத்தின் மையம் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பை மையப்படுத்திய கிழக்கு மாகாணத்தை நோக்கி மாறிக் கொண்டிருக்கிறது". (அறபாத் – 1998:i)

மு. பொன்னம்பலத்தின் இக்கூற்று கிழக்கு மாகாண முஸ்லிம் இளம் படைப்பாளிகளின் ஆக்கபூர்வமான பங்களிப்பை குறிப்பிடுவதாகவே அமைகிறது.

1990கள் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் கறை படிந்த காலகட்டமாகும். இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஒரு தொகுதியினரான வடமாகாண முஸ்லிம்கள் இருபத்தி நான்கு மணித்தியாலத்துக்குள் தாம் சொந்தமாக வாழ்ந்த இடத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்பட்டனர். இதனால் அவர்கள் நாட்டுக்குள்ளே பல இடங்களில் அகதிகளாக வாழ்ந்ததோடு நாட்டுக்கு வெளியேயும் இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். இந்த அனுபவங்கள் பல சிறுகதை ஆசிரியர்களாலும் கையாளப்பட்டுள்ளது. இவ்வகையில் யாழ். அஸீம், இளைய அப்துல்லாஹ், எஸ்.எச். நிஃமத் ஆகிய சிறுகதையாசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

1990களின் இறுதியில் வித்தியாசமான போக்கைப் பிரதிபலிப்பவர்களாக குறிப்பாக 'சரிநிகர்' சிறுகதையாளர்களாக எழுதியவர்களில் அம்ரிதா றியாஸும் ஹஸீனும் முக்கியமானவர்கள். அம்ரிதா றியாஸ் 'சரிநிகர்' மூலம் சிறுகதைத் துறைக்கு அறிமுகமானவர். 1999இலே இவரது பல கதைகள் வெளிவந்துள்ளன. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 'கிழக்கொளி' என்ற சஞ்சிகையிலும் இவர் சில கதைகளை எழுதியுள்ளார். உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரியான இவர், மனித சமுகத்தை விலங்கு சமுகத்தின் நடத்தையினூடாக தமது கதைகளில விமர்சிக்க முற்பட்டவர். இவரது கதைகள் 'விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது மனித நடத்தைகள்' என்ற தொகுதியாக வெளிவந்தது. பெரும்பாலும் இக்கதையில் யுத்தம், இனமுரண்பாடு, அரசியல் சார்ந்த அம்சங்கள் குறியீடாகப் பேசப்பட்டுள்ளன. இக்கதைத் தொகுதி பற்றி எம்.ஏ. நுஃமானின் (அம்ரிதா ஏயெம் 2008:முன்னுரை) கூற்று இங்கு கவனிக்கத்தக்கது:

> "இத்தொகுப்பில் உள்ள கதைகள் எல்லாமே வாழ்க்கை யதார்த்தத்தின் பல்வேறு முகங்களைக் காட்டுவன. பெரும்பாலான கதைகள் இன்றைய இனத்துவ யுத்தத்தின் அகோரமான வெக்கையை முகத்தில் அறைந்தாற் போல் சொல்கின்றன. யுத்தத்தால் நசுக்கப்பட்ட சிறுவர்களின் அவலம் (கிருஷ்ணபிள்ளை, ஓணான்கள்) கடலில் தத்தளித்துக் கரை ஒதுங்கிய அப்பாவியை ஒரு பதக்கத்துக்காக சுட்டுக் கொல்லும் இராணுவ வீரன் (தறு), நள்ளிரவில் இராணுவ முகாமைத் தாண்ட முடியாமல் விஷம் ஏறி வண்டிக்குள்ளேயே செத்துப் போகும் பாம்பு கடித்த பெண் (பாம்புகள்), இராணுவப் பாதுகாப்புக்காக அழிக்கப்படும் காடுகள் (பச்சைக் கொலை), வெளிநாடு செல்வதற்காக தலைநகர் வந்து லொஜ்ஜில் தங்கி நிற்பவர்கள் பொலிஸாரினால் அள்ளிச் செல்லப்படுதல் (கூண்டுகள்) - இவை யுத்தத்தின் முகங்களை நேரடியாகக் காட்டுவன. சில கதைகள் (குளங்கள், கடல் ஆமைக் குஞ்சுகள்) இன முரண்பாடு மனித வண்முறை என்பவற்றை உருவகமாகவும் குறியீடாகவும் கூறுவன. இன்னும் சில கதைகள் (விலங்கு நடத்தைகள், குரங்குகளின் இராச்சியத்தில்) குரங்குகளின் சமூக வாழ்க்கைப் படிமங்கள் ஊடாக இன்றைய அரசியலைப் பேசுகின்றன."

இக்கதை சொல்லும் முறைமையையும், பொருள் வடிவம் முதலானவற்றையும் நோக்கும் போது சமகால இலங்கைத் தமிழ்ச் சிறுகதை உலகில் அம்ரிதாவுக்கு தனியான ஓரிடமுண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் திருப்பு முனையிலும் முஸ்லிம் எழுத்தாளர்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றியமைக்கு மேலுள்ள சில எடுத்துக்காட்டுகள் ஆதாரமாகும். பெரும்பாலும் அக்கதைகள் யாவும் தற்காலச் சூழலை மிகச் சிறப்பாக பிரதிபலிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**கவிதை:**

இலங்கைத் தமிழ்க்கவிதை மரபின் மாறு காலமாக 1940னை குறிப்பிட முடியும். மஹாகவியின் வருகையோடு பாரதி, பாரதிதாசன் ஈடுபாட்டோடு பலர் கவிதை எழுதத் தொடங்கினர். சாதாரண மக்களின் பிரச்சினைகளை இவர்கள் தமது கவிதைகளில் வெளிப்படுத்தத் தொடங்கினர். இக்கால கட்டத்தில் பழைய மரபில் காலூன்றி புதிய பரம்பரையினருக்கு வழிகாட்டியாக அமைந்த சில கவிஞர்களும் கவிதை எழுதினர்.

முற்போக்கு அம்சங்களைப் பிரதிபலிக்கத்தக்கதாக எழுதிய கவிஞர்களுள் முதன்மையானவர் கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்கள். இவரது பல படைப்புக்களுள் 'செய்னம்பு நாச்சியார் மான்மியம்', மட்டக்களப்பு சாதாரண முஸ்லிம் பெண்களின் வாழ்வியலை தத்ரூபமாக எடுத்துக்காட்டுகிறது. இதன் மூலம் முஸ்லிம் திருமணத்திலுள்ள செப்பு, மணம் பேசுவது, மௌலூது ஓதுவது, தாலி கட்டுவது முதலான பல்வேறு விடயங்களை அறிய முடிகிறது. இது மாத்திரமன்றி இம்மான்மியம் கிழக்கு முஸ்லிம் பெண்களிடம் உள்ள சீட்டுக்கட்டும் முறை, ஆபரணங்கள் அணியும் முறை, கருமாரி அம்சம், சுன்னத்துக் கல்யாணம், ஓதப்பள்ளி, ஹதீது சொல்லுதல், களிக்கம்படித்தல் முதலான அம்சங்கள் குறித்தும் எடுத்துக் கூறுகின்றது. கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டுக் கூறினை அறிய இம்மான்மியம் பெரிதும் உதவுவதோடு கவிதையில் இந்த செய்திகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னுதாரணமாக அமைவதும் ஆகும்.

கிழக்கிலங்கை தந்துள்ள முன்னனிக் கவிஞர்கள் என கனக செந்திநாதன் (1964:156) எம்.எம். சாலிஹ் (புரட்சிக்கமால்), எம்.எஸ்.எம். சாலிஹ் (அண்ணல்) எம்.ஏ. கபூர் (யுவன்) ஆகியோரைக் குறிப்பிடுகின்றார். புரட்சிக் கமால் முஸ்லிம் சமூகத்தில் துணிகரமான கருத்துக்களை முன்வைத்தவர் ஆவார். இவரது கவிதைகளை பேராசிரியர் க.கைலாசபதி, நு.்மான் ஆகியோர் விதந்துரைத்து கருத்துக்கள் கூறியமையும் குறிப்பிடத்தக்கது. 1960கள் இலங்கை முஸ்லிம்களின் கவிதைகளில் காத்திரமான காலம். முந்திய காலக் கவிதைகளின் பொருள், செய்யுள் மரபு, செல்வாக்கிருந்த போதும், பிற்காலத்தில் பெயர் பெற்ற முக்கியமான கவிஞர்கள் தோன்றிய காலம் இது.

இக்கால கட்டத்தில் கவிஞர் ஏ. இக்பால், பஸீல் காரியப்பர், நு.்மான், அன்பு முகைதீன் மருதூர் ஏ. மஜீட் ஆகியோர் கவிதைகள் எழுதுகின்றனர்.

"60, 70களின் நவீன கவிதை வளர்ச்சிக்கு வளம் சேர்க்கும் கவிஞர் சிலர் முன்னிலை எய்துகின்றனர். இவர்களுள் நு.்.மான், சண்முகம் சிவலிங்கம், மு. பொன்னம்பலம் ஆகியோர் முக்கியமானவர்கள்"

என்று கா. சிவத்தம்பி (2001:47) குறிப்பிடும் நவீன கவிதையின் பிதாமகர்களில் ஒருவராக நு.்.மானைக் கருத முடியும். வடக்குப் புறத்தே மஹாகவி ஏற்படுத்திய கவிதைத் திருப்பு முனையின் கிழக்கு வாரிசாக நீலாவணன் அமைகிறார். நீலாவணன் பண்ணையில் வந்த தமிழ் கவிதையின் புதிய பரிமாணத்தின் பிரதிநிதிகளில் நு.்.மான் முதல்வராகிறார். தான் வாழும் சமூகத்தின் பாரம்பரியத்தையும் சமூக சீர்திருத்தத்தையும் பேசும் நு.்.மானின் கவிதைகள் சாதாரண மக்களின் பேச்சு வழக்கிலும் அமைந்தன. நு.்.மானின் சமூகக் கவிதைகள் 'அழியா நிழல்கள்' (1980) என்ற தொகுதியாகவும் அரசியற் கவிதைகள் 'மழைநாட்கள் வரும்' (1983) தொகுதியாகவும் வெளிவந்தன. இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் நு.்.மானின் (1983:79) 'புத்தரின் படுகொலை' மிகத் துணிகரமான படைப்பாகும். இது போன்ற பல சமூக அரசியல் கவிதைகளை நு.்.மான் ஆக்கியுள்ளார். கலைத்துவத்துடனும் அழகியலோடும் அமைந்த நு.்.மானின் கவிதைகள் எடுத்துரைப்பு முறையில் புதிதாய் அமைந்திருந்தமையும் கவனிக்கத்தக்கது.

1977இல் வெளிவந்த 'தாத்தாமார்களும் பேரர்களும்' நு.்.மானின் நெடுங்கவிதைத் தொகுதியாகும். முஸ்லிம் சமூக பழமைச் சுமையை விமர்சிக்கும் அற்புதமான தொகுதி இது. நு.்.மானின் கவிதைகள் சமூக அவலங்கள், யதார்த்தங்களை சித்திரிக்கும் நல்ல கருவியாக செயற்பட்டன. 1982இல் அவர் வெளியிட்ட 'பலஸ்தீனக் கவிதைகள்' மொழி பெயர்ப்பு நூல், ஈழத்து தமிழர் விடுதலைப் போராட்ட உணர்வுக்கும் பிற்காலத்தில் அது தொடர்பாக வெளிவந்த கவிதைகளுக்கும் உந்து சக்தியாக அமைந்தது. இதனை நு.்.மானின் முக்கிய பணியாகக் கருதவேண்டும்.

இக்கால கட்டத்தில் இடது சாரிச் சிந்தனையுடன் மருதமுனையில் இருந்த மருதூர்க்கனி கவிதை எழுதினர். யூ.எல்.எம். ஹனீபா எனும் இயற் பெயரைக் கொண்ட இவர் பிற்காலத்தில் முஸ்லிம் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு பாராளுமன்ற உறுப்பினராகவும் செயற்பட்டார் அப்போது முஸ்லிம் அரசியற் பின்னணியில் இவர் பல கவிதைகளை எழுதியுள்ளார். இவரது 'அந்த மழை நாட்களுக்காக' என்ற தொகுதியும் பிற்காலத்தில் வெளிவந்தது.

கவிஞர் எம்.எச்.எம். அஷ்ர.்ப் அவர்கள் பல்துறைக் கவிதைகளை எழுதியவர். சிறப்பாக சமூக விடுதலை, சிறுவர் கவிதைகள் முதலியவற்றையும் ஆக்கியவர். அவரது கவிதைகளின் பரப்பை அறிய அவர் வெளியிட்ட 'நான் எனும் நீ' எனும் கவிதைத் தொகுதி உதவும். இலங்கையில் வெளிவந்த அளவில் பெரிய கவிதைத் தொகுதி இது என குறிப்பிடப்படுகிறது.

எம்.எச். சேகு இஸ்ஸதீன் அவர்களும் இக்கால கட்டத்தில் கவிதை எழுதியவர். பெரும்பாலும் தத்துவச் சார்புள்ள கவிதைகளை அவர் எழுதினார். 'வேதாந்தி' என்ற புனைபெயரோடு கவிதை எழுதிய அவர் முஸ்லிம் அரசியலில் ஈடுபாடு காட்டி பாரளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் செயற்படுகிறவர். பிற்காலத்தில் ஒரு சில அரசியல் கவிதைகளையும் எழுதிய இவரது கவிதைத் தொகுதி ஒன்றும் வெளிவந்தது. தனித்துவமான கவிதைகள் எழுதியவகையில் இவரது தொகுதியும் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் பிச்சமூர்த்தி முதலானவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட புதுக்கவிதைப் பாரம்பரியம் 1970களில் இலங்கை – முஸ்லிம் கவிஞர்களையும் பாதிக்கத் தொடங்கியது. சமூக மாற்றத்துக்கான அடிப்படையாக கவிதையைக் கொண்டு எச்.எம். பாறூக், அல் அஸூமத், மேமன் கவி, எம்.எச்.எம். ஷம்ஸ், அன்புடீன், பாலமுனை பாறூக், மன்சூர் ஏ. காதர் முதலான முன்னணிக் கவிஞர்கள் செயற்பட்டனர்.

இக்கால கட்டத்தினதும் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தின் இன்னுமொரு திருப்புமுனையாகவும் கிழக்கிலிருந்து தன் பேனா முனையை உயர்த்தியவர் சோலைக்கிளி – யூ.எல்.எம். அதீக். கவிதை சொல்லும் முறையிலும் கவிதை பாடு பொருளிலும் நிறைய மாற்றங்களைக் கொண்டு வந்தவர் இவர். இலங்கைச் சமகால சமூக, அரசியல் சூழ்நிலைகளையும் தனி மனித உணர்வுகளையும் புதிய முறையில் நோக்கி நவீன தமிழ்க் கவிதையில் மாற்றத்தை ஏற்படுத்தியவர். அ.்.றிணைப் பொருட்களின் ஊடாக அவர் சமூக அரசியல் நிலைமைகளை வெளிப்படுத்திக் காட்டினார்.

நிலவுக்கு வேலியிடு
சூரியனையும் பங்கு போட்டுப் பகிர்ந்து கொள்
வெள்ளிகளை எண்ணு
இனவிகிதாசாரப்படி பிரி
நாகரீக யுகத்து மனிதர்கள் நாம்
கடலை அளந்து எடு
வானத்தைப் பிளந்து துண்டாடு
சமயம் வந்தால் காற்றைக் கடத்து
எறும்புக்கும்
இன முத்திரையிடு
சாதி சமயத்தைப் புகட்டு
புறாமுக்கட்டும்
இன்னொரு இனத்தை நகைத்து

இவ்வாறு இலங்கை இனப்பிரச்சினையின் வடிவத்தை மிகத் தத்ரூபமாக சோலைக்கிளி இக்கவிதையில் வெளிப்படுத்துகின்றார். ஈழத்துக்கு வெளியேயும் பேசப்படுகின்ற மிக முக்கியமான கவிஞர் இவர். சோலைக்கிளியை அறிமுகப்படுத்தியதில் தமிழகத்தைச் சேர்ந்த கி. ராசதுரை, வ. கீதா ஆகியோருக்கு முக்கிய பங்கு உண்டு.

இலங்கையின் இன்னுமொரு திருப்புமுனைக் காலத்தில் இருந்து புதியதொரு கலாசாரத்துள் நமது கவிதைப் பொருள் நுழையத் தொடங்குகிறது. சொந்த உள்ளுணர்வுகளையும், சமூக சீர்திருத்தங்களையும் அழகியல் உணர்வுகளோடு எழுதிய நமது பெரும்பாலான கவிஞர்களை இனத்துவ உணர்வு பெரிதும் பாதிக்கத் தொடங்கியது. இலங்கையின் கிழக்குப் பிரதேசம் தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்த இடம். கல்வி, கலாசார, அரசியல், இலக்கிய, பொருளாதார ரீதியாக ஒன்றுக்குள் ஒன்றாக அவர்கள் செயற்பட்டனர். இக்காலங்களில் இலங்கையின் இன உறவைச் சிதைத்த இனமோதல் தமிழ் முஸ்லிம் உறவையும் பாதிக்கத் தொடங்கியது.

கிழக்கில் தமிழர் விடுதலைப் போராட்டத்திலும் ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ் – முஸ்லிம் உறவு முரண்பாட்டு நிலைக்கு வரத் தொடங்கியது. அதன் முதற் கட்டமாக தமிழர் விடுதலை இயக்கங்களில் இணைந்து செயற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் இந்த இனத்துவத் தீக்குள் மாட்டிக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து முஸ்லிம்களின் பொருளாதாரத்தைச் சிதைப்பதிலும் சமூக உணர்வை சீர் குலைப்பதிலும் சில விடுதலை இயக்கங்களின் இளைஞர்கள் சம்பந்தப்படத் தொடங்கினர். புதிய சூழ்நிலைக்கு முகம் கொடுக்க முடியாத முஸ்லிம் இளைஞர்கள் ஊர்காவல் படை, பொலிஸ் படைகளில் இணைந்து சட்ட ரீதியாக சமூகத்துக்கு உதவினர். இந்தக் கால கட்டத்தில் வெளிவந்த கவிதைகள் வெவ்வேறு விதமான உணர்வுகளைப் பெய்தன. இதன் ஒரு குறியாகத்தான் அஷ்ர.்.ப் ஷிஹாப்தீனின் 'ஷெய்த்தூன்' கவிதை வந்தது. இந்த வரிசையிலேயே என்.ஏ. தீரன் 'அபாபீல்களும் யானைப்படையும்' என்ற கவிதையினை எழுதினார்.

இந்தப் பிரச்சினைகளை ஏ.ஜீ.எம். சதகா, எச்.ஏ. அஸீஸ், நிசப்தன், ஏ.எம்.எம். நஸீர், ஓட்டமாவடி அறபாத், என். ஆத்மா எனப் பலர் பாடியுள்ளனர். இவர்களின் கவிதைப்பணி பெரிது. இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஆராயப்பட வேண்டியவர்கள். என். ஆத்மாவின் 'பொன்னத்தா பூவத்தா' ஈழத்து முஸ்லிம்கள் இனப்பிறழ்வினால் பட்ட அவலத்தை பட்டியலிட்டுக் காட்டுகிறது. இவ்வரிசையிலே இக்கால கட்டத்துப் பிரச்சினையை சித்திரிக்கத்தக்கதாக எஸ்.நளீம், சகீப், காத்தான்குடி றஹீம், ஏ.எம். றஸ்மி, பாலைநகர் ஜிப்ரி, நியாஸ் ஏ. சமட், ஓட்டமாவடி இஸ்மாயீல், எச்.எம். ஜாபிர் ஆகியோர் கவனிக்கத்தக்க கவிதைகளை எழுதியுள்ளனர். இலங்கை இன முரண்பாட்டில் சிக்கிக் கொண்ட முஸ்லிம்களின் உணர்வுகளைப் பெய்யும் மொத்த கவிதைத் தொகுதியாக 2002இல் வெளியான 'மீஸான் கட்டைகளில் மீள எழும் பாடல்கள்' அமைகிறது. இக்கவிதைகள் மூலமாக இந்த இனச்சங்காரத்தில் சிதைந்து போன முஸ்லிம்களின் எல்லா வகையான இழப்புக்களையும் கண்டு கொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்டவர்களுள் எஸ். நளீம், ஏ.எம். றஸ்மி ஆகியோர் வேறு பல கவிதைகளையும் எழுதி தமது தொகுதிகளை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. முல்லை முஸ்றிபா, நாச்சியார்தீவு பர்வீன், அலறி, விஜிலி, நவாஸ் சௌபி, அஸார்தீன் என பல கவிஞர்களும் பல்வேறு உணர்வுகளைப் பேசும் கவிதைகளை எழுதி வருகின்றனர். இது போன்று இப்பிரதேசத்தில் நூற்றுக் கணக்கான முஸ்லிம் இளம் கவிஞர்கள் கவிதைத் துறையில் ஈடுபாடு காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர்களுள் வடஇலங்கை முஸ்லிம்களின் வெளியேற்றத்தைக் குறித்து முல்லை முஸ்ரிபா எழுதிய பல கவிதைகள்

மிகுந்த கவனத்திற்குரியன. தற்கால சூழலில் வடமாகாண முஸ்லிம்கள் அனுபவிக்கும் பல்வேறு இன்னல்களும் அவருடைய கவிதையின் பொருளாகின.

குறுங்காவியம் என்ற பெயரில் கொந்தளிப்பு என்ற நவீன காவியத்தினை பாலமுனை பாறுக் வெளியிட்டார். தென்கிழக்காசிய மக்களுக்கு ஏற்பட்ட புதிய அனுபவமான சுனாமி இக்காவியத்தின் பொருளாகியது. இது குறித்து அந்நூலின் முன்னுரையில் றமீஸ் அப்துல்லாஹ் (பாறுக் பாலமுனை 2010:12) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> "சுகமான கடற்கரைக் காட்சியும் குடும்ப வாழ்வின் இனிய உணர்வுகளும் குடும்பக் கலாசாரப் பரிமாணங்களும் சுனாமியின் பேயவலத்துள் மறைவதும் சுனாமியைத் தொட்டெழுந்த முதலாளித்துவத்தினதும் அரசியலினதும் நவீன கபளீகரங்களும் 'கொந்தளிப்பில்' தெளிவாகிறது"

இலங்கைப் பெண் கவிஞர்கள் பலரும் ஆற்றலுடன் செயற்பட்டனர். இவர்களுள் பேசப்படத்தக்க நவீன பெண் கவிஞராக சுல்பிகாவைக் குறிப்பிட வேண்டும். பெண்களின் உணர்வு ரீதியான பல்வேறு பிரச்சினைகளை இவர் தமது கவிதைகளில் வெளிக்கொணர்ந்தார். இவரது கவிதைத் தொகுதி 'விலங்கிடப்பட்ட மானுடம்'. கிழக்கு முஸ்லிம் பெண்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. வறுமை, சீதனம் 'பெண்' பால், சமுகக் கட்டுப்பாடு, பொருத்தமான வரன், வெளியில் சென்று உழைத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இந்தப் பிரச்சினைகளை உணர்வு ரீதியாக சுல்பிகா அற்புதமாக பதிவு செய்துள்ளார். பெண்ணியம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை கொள்கை ரீதியாக நின்று அணுகுகின்ற போக்கு சுல்பிகாவின் கவிதைகளில் உண்டு. இதே போன்ற பெண் பிரச்சினைகளைத் தீவிரமாக அடையாளப்படுத்துகின்ற தன்மை அனாருக்கும், பெண்ணியா (நஜீபா றூபி)வுக்கும் உண்டு. பெண் பிரச்சினைகளை மாத்திரமன்றி பொதுவான உணர்வுகளை இக்கவிஞர்கள் பதிவு செய்தமைக்கு அவர்களது தொகுதிகளே சான்று. இவர்கள் தவிர பஹீமா ஜஹான், மசூறா ஏ. மஜீட் என பல முஸ்லிம் பெண்கவிஞர்கள் கவிதையில் ஈடுபாடு காட்டி வருகின்றனர். இப்பணியில் சுதந்திரமாக ஈடுபடுவது குறித்து இவர்களுக்கு பல பிரச்சினைகள் உள. முஸ்லிம் பெண், பெண் பற்றிய எல்லாப் பிரச்சினைகளும் இவர்களுக்கு உள. இவை தனியாகவும் விரிவாகவும் பேசப்பட வேண்டியன. பெரும்பாலும் இலங்கை முஸ்லிம் பெண்களின் கவிதைகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி நிறைய அறிய முடிகிறது.

**விமர்சனம்:**

நவீன விமர்சனப் பாரம்பரியத்திலும் முஸ்லிம்களுக்குக் குறிப்பிடத்தக்க பங்குண்டு. எம்.எம்.எம். ம.்றூப் கவனிக்கப்படாத மிகவும் பேசப்படவேண்டிய விமர்சகர். நாவல், புதுக்கவிதை தொடர்பாகக் காரசாரமான விமர்சனங்களை அவர் மேற்கொண்டுள்ளார். மற்றுமொரு காத்திரமான விமர்சகர் தமிழகத்திலும் இலங்கையிலும் நன்கு அறியப்பட்ட எம்.ஏ. நு.்மான். இவர் பல்கலைக்கழக ஆசிரியர். நவீன கோட்பாடுகளோடு தொடர்புறுத்தியும் குறிப்பிடத்தக்க விமர்சனங்களை அவர் ஆற்றியுள்ளார். தமிழக எழுத்தாளர்கள் சிலரது எழுத்துக்கள் தொடர்பாகவும் புரட்சிக்கமால், எம்.எச்.எம். அஷ்ர.்.ப், சோலைக்கிளி, அம்ரிதா றியாஸ் ஆகியோரது தொகுதிகள் தொடர்பாகவும் அவர் முன்வைத்த விமர்சனங்கள் குறிப்பிடத்தக்கன. "பிரதியின் மரணம்", "மொழியியலும் இலக்கியத் திறனாய்வும்" முதலானவை அவரது முக்கியமான விமர்சனக் கட்டுரைகள். 'திறனாய்வுக் கட்டுரைகள்' என்ற நூலையும் அவர் வெளியிட்டுள்ளார். அவரது விமர்சனக் கட்டுரைகள் பற்றித் தனியாக ஆய்வு செய்ய வேண்டும். எம்.எஸ்.எம். அனஸ், றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோரும் பல்கலைக்கழகத்திலிருந்து இலக்கிய விமர்சனத்தில் ஈடுபடுபவர்கள். சிராஜ் மஷ்ஹூர், அப்துல் றஸாக் முதலானவர்களும் தமிழிலக்கிய அறிவுடன் இலக்கிய விமர்சனப் பணியில் ஈடுபடுகின்ற குறிப்பிடத்தக்க விமர்சகர்கள். ஏ. இக்பால், மேமன் கவி, அஷ்ரப் சிஹாப்தீன், தாஸிம் அகமது, றஊப் முதலான படைப்பாளிகளும் விமர்சகர்களாகத் தொழிற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

**சஞ்சிகைகள்:**

இலங்கை முஸ்லிம்கள் இலக்கிய சஞ்சிகைகளினூடாகவும் தற்காலச் சூழலில் படைப்பிலக்கியத்திற்கான பங்களிப்பினைச் செய்து வருகின்றனர். இந்தவகையில் நு.்மானின் 'கவிஞன்' பௌஸரின் 'மூன்றாவது மனிதன்', மருதூர் பாரியின் 'முனைப்பு', அஷ்ர.்.ப் சிஹாப்தீனின் 'யாத்ரா', 'பெருவெளி', 'படிகள்' முதலானவையும் குறிப்பிடத்தக்க இலக்கிய சஞ்சிகைகள். இச்சஞ்சிகைகளினூடு பல விமர்சனப் பார்வைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 'கவிஞன்', 'யாத்ரா' முதலானவை கவிதைகளைப் பற்றிய விமர்சனங்களை முன்வைத்தன. 'மூன்றாவது மனிதன்',

'பெருவெளி' ஆகியவை பல்துறை சார்ந்த விமர்சனங்களை மிகக் காத்திரமாக முன்வைத்த சஞ்சிகைகளாகும். 'பெருவெளி' இலங்கை எழுத்தாளர்களிடையே பின்நவீனத்துவம் தொடர்பாகப் பல்வேறு புரிதல்களை ஏற்படுத்திய சஞ்சிகையாகும். பெருவெளியூடாகக் காத்திரமான ஒரு முஸ்லிம் விமர்சனக் குழுவே உருவாகி வருகிறது. இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது. இங்கிருந்து காத்திரமான மாணவர் குழுவொன்று சஞ்சிகை வெளியீட்டிலும் படைப்புத் துறையிலும் அக்கறை காட்டி வருவதையும் குறிப்பிட்டாக வேண்டும். 2000 – 2010 ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் நவீன தமிழ் இலக்கியச் சூழலுக்கு அவர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை ஆற்றியுள்ளார்கள்.

**முடிவுரை:**

மொத்தத்தில் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கு எல்லாவகையிலும் வீரியமான பங்களிப்பினை ஆற்றி வருகின்றனர். ஆகவே தற்கால சூழ்நிலையில் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்கு புறக்கணிக்கப்படத்தக்கதல்ல மாறாக அழுத்தி பேசப்படத்தக்க ஒரு வரலாறு இலங்கை முஸ்லிம் எழுத்தாளருக்கு உண்டு என்பது மிகக் கூர்மையாக விமர்சகர்களாலும் ஆய்வாளர்களாலும் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். முஸ்லிம் சமூகத்தின் இருப்பையும் இலங்கை நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம்களின் வகி பங்கையும் அறிந்து கொள்ள இக்கட்டுரை உதவும். மேலும் நுண்ணிய ஆய்வுகளை இக்கட்டுரை வேண்டி நிற்கின்றது.

**பயன்பட்ட நூல்கள்:**


1. அப்துல் காதர் லெவ்வை, (1967), **செய்னம்பு நாச்சியார் மான்மியம்**, மணிக்குரல் பதிப்பகம், கல்ஹின்னை

2. அப்துல் றஸாக், (2005), **வாக்குமூலம்**, துயரி, அக்கரைப்பற்று.

3. அம்ரிதா ஏயெம், (2002), **விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள்**, மூன்றாவது மனிதன் பதிப்பகம், கொழும்பு.

4. அறபாத், (1998), **நினைந்தழுதல்**, இஸ்லாமிக் புக்சென்டர், வாழைச்சேனை.

5. (2004), **வேட்டைக்குப் பின்**, சுஹறா பப்ளிகேசன், வாழைச்சேனை.

6. அனார், (2007), **எனக்கு கவிதை முகம்**, காலச்சுவடு பதிப்பகம், சென்னை.

7. அஸீஸ், எம். பாயீஸ், (2008), **வயலான் குருவி**, கலாசார அலுவல்கள் திணைக்களம், பத்தரமுல்லை.

8. இஸ்மாயில், வீ.எம்., (2007), **மருதூர்க்கொத்தன் கதைகள்**, மருதமுனை.

9. கனக. செந்திநாதன், (1964), **ஈழத்து இலக்கிய வளர்ச்சி**, குரும்பசிட்டி.

10. சிவத்தம்பி, (1994), **தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்**, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு,

11. சிவத்தம்பி, கா., சிவகாமி ச.குருநாதன் இராம., (2005), **உலகத் தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 1851 – கி.பி. 2000)**, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

12. நற்பிட்டிமுனை பளீல், (1997), **மெல்லச் சாகும் வாலிபம்**, கல்முனை.

13. நஸீறுதீன், எஸ்., (2004), **நச்சுவளையம்**, சாய்ந்தமருது கலை இலக்கிய வட்டம், சாய்ந்தமருது.

14. நு∴மான் எம்.ஏ. (2006), **மொழியும் இலக்கியமும்**, காலச்சுவடு பதிப்பகம், சென்னை.

15. (1983), **மழை நாட்கள் வரும்**, அன்னம் சிவகங்கை.